மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 32 வியாழக்கிழமை 17.08.2023 கதிர் 52

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# குருந்தூர்மலையில் சிவாலயம்! பௌத்த இந்து அமைப்புகள்

## யாழில் கூட்டாக அறிவிப்பு





குருந்தூர்மலையில் சிவாலயமொன்றை நிறுவ தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பௌத்த இந்து அமைப்புகள் சில கூட்டாக அறிவித்துள்ளன.

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பாக இன்று யாழ்ப்பாணம் ஆரியகுளம் நாக விகாரையில், தென்னிலங்கை பௌத்த பிக்குகளும், சிவசேனை உள்ளிட்ட சில சைவ அமைப்புக்களின் பிரதிநிதிகள், குருமார்களும் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன் பின்னர் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே பௌத்த இந்து அமைப்புகள் இதனை அறிவித்தன.

நாளைய தினம் குருந்தூர் மலையில் சைவர்கள் பொங்கலில் ஈடுபடவுள்ள நிலையில், அது தொடர்பாக கலந்துரையாடல் இடம்பெறவில்லை ஊடகங்களின் கேள்விக்கு அவர்கள் பதிலளித்தனர்.

இந்தக் கலந்துரையாடலில், ஆரியகுளம் நாக விகாராதிபதி, குருந்தூர் மலை விகாராதிபதி, தையிட்டி விகாராதிபதி, நாவற்குழி விகாராதிபதி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

## யாழில் பொலிஸாரின் கண் முன்னே சூறையாடப்படும் மக்கள் சொத்து

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை மாங்கொல்லைப் பகுதியில் திருடர்களின் நடமாட்டம் அதிகளவில் காணப்படுவதாகவும் பொலிஸார் திருட்டுக்களை கட்டுப்படுத்த தவறி வருவதாகவும் அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

கடந்த 33 வருட காலமாக உயர் பாதுகாப்பு வலயமாக2➤

## அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவாக குரல் கொடுக்கும் மொட்டு எம்.பி.

### முதலில் மாகாணத் தேர்தலை நடத்துமாறும் அவர் வலியுறுத்து



ஒற்றையாட்சிக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்வதில் பிரச்சினை இல்லை. முதலில் மாகாண சபைத் தேர்தலை நடத்திவிட்டு, அதன்பிறகு அதிகாரப் பகிர்வு சம்பந்தமாகப் பேசலாம், என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆலோசனை2➤

## பிரபாவின் குடும்பத்தை வைத்து அரசியல் செய்வதைத் தவிருங்கள்

### – சரத் பொன்சேகா வேண்டுகோள்



விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் குடும்பத்தை வைத்து அரசியல் செய்வதை உடனடியாக நிறுத்துமாறு புலம்பெயர் தமிழர்களிடம் முன்னாள் இராணுவத் தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கேட்டுக்கொண்டுள்ளார்.

பிரபாகரனின் மனைவி மதிவதனி மற்றும் மகள் துவாரகா ஆகியோர் உயிருடன் இருக்கின்றனர் எனவும், அவர்களைத் தான் நேரில் சந்தித்தார் எனவும் வெளிநாடொன்றில் வசிக்கும் மதிவதனியின் சகோதரி ஒருவர் சமூகவலைத்தளங்களில் காணொளியொன்றை அண்மையில் வெளியிட்டிருந்தார். அந்த வீடியோ வைரலாகியுள்ளது. இந்த நிலையிலேயே முன்னாள் இராணுவத் தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

2➤

## நெடுந்தீவில் மனநிலை குன்றிய இளைஞனைக் காணவில்லை!



நெடுந்தீவு பகுதியில் இளைஞர் ஒருவரை காணவில்லை என முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக நெடுந்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த 11ஆம் திகதி மதியம் வீட்டிலிருந்து சென்ற வேளையிலேயே அவர் காணாமல் போயுள்ளார்

## முன்பள்ளிக் கல்வியில் விரைவில் மாற்றம்! அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவிப்பு

சர்வதேச தரத்திற்கு அமைவாக முன்பள்ளிக் கல்வி முறையைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஐந்து பிரிவுகளைச் சேர்ந்த முன்பள்ளி மாணவர்கள் தரம் ஒன்றிற்கு வருகிறார்கள். ஒரு முன்பள்ளி அனைத்துச் செயல்பாடுகளையும் கற்றுத் தருகிறது.

மற்றொரு முன்பள்ளி ஒன்றிலிருந்து 10 வரையான எண்களைக் கற்றுக்கொடுக்கிறது. மற்றொன்று 100 வரை கற்றுக்கொடுக்கிறது.

அவர்கள் அனைவரும் தரம் ஒன்றுக்கே வருகின்றனர். இப்போது ஜப்பானில் இவை அனைத்தையும் கற்பிக்கிறார்கள். அதுதான் உலகத் தர அமைப்பு.

எனவே, தேசியக் கல்வி அல்லது சர்வதேச தரத்திற்கு ஏற்ப இரண்டு வருட முன்பள்ளிக்கான2➤

### ரணிலை ஆதரிக்கும்

## சு.க. உறுப்பினர்களுடன் மைத்திரி விசேட பேச்சு!

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுக்கும் ரணில் அரசுக்கு ஆதரவளிக்கும் சு.கவின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல் கொழும்பு - ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையில்2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

இலங்கையிலிருந்து வெளிவரும் மாலைச் செய்தி இதழ்

# கிழக்கில் இடித்து அழிக்கப்பட்ட இந்து ஆலயம் வீதியில் தூக்கி எறியப்பட்ட அம்மன் விக்கிரகம்



திருகோணமலையில் வெருகல் மலைநீலி அம்மன் ஆலயத்தை இடித்து, தற்போது அங்கு பௌத்த விகாரை அமைக்கப்பட்டுவருவதாக அப்பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

வெருகல் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கல்லடி பகுதியில் உள்ள மலைநீலி அம்மன் ஆலயத்தின் காணிகள் தொல்லியலுக்குரிய பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டு கையகப்படுத்தப்பட்டிருந்த நிலையிலேயே அது பௌத்திற்குரிய பகுதியாக உரிமை கோரப்பட்டு, அப்பகுதியில் விகாரை அமைக்கப்பட்டு வருகிறது.


தொல்லியல் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டு பௌத்த விகாரை அமைக்கப்பட்டு வரும் மலைநீலியம்மன் ஆலயத்துக்குரிய காணிகளை விடுவிக்குமாறு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2006 ஆம் ஆண்டுப் பகுதியில் நிலவிய யுத்தம் காரணமாக அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து மட்டக்களப்பு உட்பட பல்வேறு இடங்களில் தஞ்சமடைந்தனர். இதன்போது, விமானத் தாக்குதலினால் 1835ஆம் ஆண்டுக்கு முற்பட்ட பழைமையான வரலாற்றைக் கொண்ட மலைநீலி அம்மன் ஆலயமும் சேதமாக்கப்பட்டிருந்தது.

இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் 2007ஆம் ஆண்டு மீள குடியமர்ந்தபோது அந்த ஆலயம் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு, ஆலயத்தின் இடிபாடுகள் அகற்றப்பட்ட நிலையில் தொல்லியலுக்குரிய இடமாகவும் கையகப்படுத்தப்பட்டு அம்மனின் விக்கிரகம் வீதியில் போடப்பட்டிருந்தது.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த நிலையில் பௌத்த பிக்குகளால் ஆலயம் பௌத்தத்திற்குரியது எனக் கூறி ஆக்கிரமிக்கப்பட்டதோடு, வெளி இடங்களிலிருந்து பாரிய கற்களைக் கொண்டுவந்து பல கட்டுமானங்களும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் கிராம மக்கள் காலாகாலமாக நெற்செய்கையை மேற்கொண்டு வந்த ஆலயத்தைச் சூழவுள்ள 50 ஏக்கருக்கு மேற்பட்ட வயற்காணிகளும் பறிமுதல் செய்யப்பட்டு தமது வாழ்வாதாரமும் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.




தொல்லியலுக்குரிய இடமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள ஆலய வளாகத்தினுள் பிக்குகளின் கட்டுமானங்களுக்கான அனுமதியை வழங்கி, பாராபட்சமான முறையில் தொல்லியல் திணைக்களம் செயற்படுவதாகவும் அப்பகுதி மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

நீண்டகாலமாக வீதியோரத்தில் இருக்கின்ற தமது ஆலயத்தை அந்தக் காணிக்குள் வைத்து வழிபட அனுமதி வழங்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது. (க)

## யாழில் பொலிஸாரின......

காணப்பட்ட மாங்கொல்லை பகுதியில் இருந்து கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் இரா ணுவத்தினர் வெளியேறி உள்ளனர். ஆனாலும், குறித்த பகுதி இராணுவத்தினரால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவில்லை.

அதனால், அக்காணி உரிமையாளர்கள் அப்பகுதியில் குடியமர முடியாத நிலை காணப்படுகிறது.

அந்த நிலையில் அப்பகுதிக்குள் ஊடுருவும் இரும்புத் திருடர்கள் வீடுகளில் உள்ள இரும்புகளை திருடிச்செல்கின்றனர்.

அது குறித்து தெல்லிப்பழை பிரதேச செயலர், காங்கேசன்துறை பொலிஸார் உள்ளிட்ட தரப்பினருக்கு பல தடவைகள் வீட்டு உரிமையாளர்கள் முறைப்பாடு செய்தும் திருட்டினை கட்டுப்படுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையில், இரும்புத் திருடர்கள் சுதந்திரமாக அப்பகுதிகளில் நடமாடித் திரிகின்றனர் என மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

பிரதேச செயலரிடம் முறையிட்டபோது , இராணுவத்தினர் உத்தியோகபூர்வமாக தம்மிடம் அப்பகுதியை கையளிக்காத நிலையில் தாம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாது, என முறைப்பாட்டாளர்களுக்கு தெரிவித்துள்ளார்.

பொலிஸாரிடம் முறையிட்டோருக்கு, பொலிஸார் நடவடிக்கை எடுப்பதாக கூறிய போதிலும், அப்பகுதியில் கண்காணிப்புக்கு சுற்றுக்காவல் பகுதியில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் கண் முன்னாலேயே இரும்புத் திருடர்கள் திருட்டில் ஈடுபடுகின்றனர்.

அது தொடர்பாகப் பொலிசாரிடம் கேட்டபோது, பழைய இரும்புகள்தானே?, அவர்கள் கொண்டு செல்லட்டும், என பதில் அளிப்பதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறாக பொறுப்பு வாய்ந்தோர் திருட்டினைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கத் தவறி வரும் நிலையில், தற்போது வீட்டின் பாகங்களை உடைத்து திருட்டில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அது தொடர்பாகத் தகவல் அறிந்து வீட்டு உரிமையாளர்கள் தமது காணிக்குள் செல்லும்போது, திருடர்கள் தம்மைப் புலனாய்வுப் பிரிவினர் எனக் கூறி, காணி இன்னமும் இராணுவக் கட்டுப்பாட்டினுள்தான் இருக்கிறது. இதற்குள் நீங்கள் வர கூடாது, என அச்சுறுத்தி அனுப்பிவிட்டு, உரிமையாளர் கண்களுக்கு முன்னாலேயே வீடுகளை உடைத்து இரும்புகளைத் திருடிச் செல்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01, க)

## பிரபாவின் குடும்பத்தை......

இறுதிப் போரில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனும், அவரின் மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளும் உயிரிழந்துவிட்டனர். இது அனைவரும் அறிந்த உண்மை. இந்த நிலையில், பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் என்று ஒரு குழுவினரும், பிரபாகரனின் மனைவி மற்றும் மகள் உயிருடன் இருக்கின்றனர் என்று இன்னொரு குழுவினரும் தமது சுயலாப அரசியலுக்காகப் பிரசாரம் செய்து வருகின்றனர்.

புலம்பெயர் தமிழர்களே இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களிடம் நாம் விநயமாகக் கேட்டுக்கொள்வது என்னவெனில், உங்கள் சுயலாப அரசியலுக்காக உயிரிழந்த பிரபாகரனின் குடும்பத்தை வைத்து அரசியல் செய்வதை உடனடியாக நிறுத்துங்கள் என்பதாகும், என்று அவர் தெரிவித்திருக்கிறார். (03)

## அதிகாரப் பகிர்வுக்கு......

வழங்கியுள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மூத்த உறுப்பினரான முன்னாள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான சர்வகட்சி மாநாட்டில் நானும் பங்கேற்றிருந்தேன். 13 குறித்து தனித்து முடிவெடுக்கப்பட மாட்டாது, அது குறித்து நாடாளுமன்றம் தீர்மானிக்கட்டும் என ஜனாதிபதி கூறிவிட்டார். எனவே, 13 ஐ முன்னோக்கிக் கொண்டு செல்வதா அல்லது என்ன செய்வது என்பது குறித்து நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டும்.

மாகாண சபைகளுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமாக சிற்சில அதிகாரங்களைப் பகிர்வதில் பிரச்சினை கிடையாது என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும்.

நாடு பிளவு படாத வகையில், ஒற்றையாட்சியைப் பாதுகாக்கும் வகையில் இதற்கான ஏற்பாடு இடம்பெற வேண்டும்.

அதேவேளை, நாட்டில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாமல் உள்ளது. அதனை நடத்தாமல் அதிகாரப் பகிர்வு பற்றி பேசி பயன் இல்லை. முதலில் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அப்போது புதிதாக நியமனம் பெறும் முதலமைச்சர்கள் உள்ளிட்டவர்களுடன் அது பற்றி பேசலாம். மாகாண சபை முறைமை என்பது 1987 இல் இருந்து இருந்து வருகின்றது. அனைத்து கட்சிகளும் அந்த முறைமையை ஏற்றுக்கொண்டுள்ளன, என்றும் அவர் தெரிவித்துள்ளார். (03)

## முன்பள்ளிக் கல்வியில்......

கட்டமைப்பை உருவாக்க வேண்டும். பயிற்சியற்றவர்களுக்கு பயிற்சியளித்து சான்றிதழ் வழங்க வேண்டும். அந்த நடவடிக்கை விரைவாக மேற்கொள்ளப்படும்.

அவர்கள் முன்பள்ளிக்குத் தகுதியானவர்களா என்பதை உறுதி செய்ய வேண்டும். சாதாரண தரப் பரீட்சையில் தோல்வியடைந்தவர்களும் கிராமங்களில் உள்ள 15 முதல் 20 மாணவர்களைச் சேர்த்து முன்பள்ளியை ஆரம்பிக்கலாம்.

இதற்காக சிறுவர் விவகார அமைச்சு, தேசிய கல்வி நிறுவனம் மற்றும் கல்வியாளர்களுடன் அடுத்த வாரம் கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளேன்.

அதிக கால அவகாசமில்லை. இப்போது நீங்கள் அதை சர்வதேச தரத்திற்கு கொண்டு செல்லவேண்டும். டிப்ளோமா கற்கை நெறிகள் வழங்கப்படுகின்றன. நாங்கள் சான்றளிப்பவர்கள் மாத்திரமே முன்பள்ளியைத் தொடங்க முடியும், என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (04)

## சு.க. உறுப்பினர்களுடன்......

அமைந்துள்ள மைத்திரிபால சிறிசேனவின் இல்லத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க ஆகியோர் பங்கேற்றனர்.

இதன்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருட பூர்த்தி கொண்டாட்டம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதுதவிர, நாட்டின் தற்போதைய நிலவரம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது. (03)

## நெடுந்தீவில் மனநிலை ......

எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 27 வயதான தம்பிப்பிள்ளை விதுசன் எனும் மனநலம் குன்றிய இளைஞரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

இதேவேளை நெடுந்தீவு 14 ஆம் வட்டாரத்தில் அன்றைய தினம் கட்டப்பட்டிருந்த தெப்பம் ஒன்றும் காணாமல் போயுள்ளது. குறித்த தெப்பத்தில் இளைஞர் தீவினை விட்டு வெளியேறியிருக்கக்கூடும் எனவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இது குறித்து கடற்படைக்கும் பொலிஸ் நிலையங்களுக்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தகவல் கிடைப்பவர்கள் பொலிஸாருக்கு அறிவிக்கும்படியும் நெடுந்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார்.




உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
- maalaikkathir@gmail.com



# அமெரிக்க - ஹவாய் தீவு காட்டுத்தீ பலி எண்ணிக்கை நூறைக் கடந்தது

## கனடாவிலும் அவசரநிலை பிரகடனம்

அமெரிக்காவின் நிர்வாகத்திற்கு கீழ் பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள ஹவாய் தீவின் மேற்கே உள்ள மவுய் நகரில் ஒரு வாரத்திற்கு முன்பு ஏற்பட்ட காட்டுத்தீ, சூறாவளிக் காற்று வீசியதன் காரணமாக முக்கிய நகரங்களான ஹலைனா, குலா உள்ளிட்ட பகுதிகளுக்கு பரவியது. இதனால் பெரும்பாலான வீடுகள் தீப்பிடித்து எரிந்தன.

25,000 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்கள் தீயில் கருகி நாசமாகின. வீடுகள், தொலைபேசிக் கோபுரங்கள் உள்ளிட்டவை தீக்கிரையாகி நாசமாகின. சேத மதிப்பு 3 பில்லியன் அமெரிக்க டொலர்களாக கணக்கிடப்பட்டுள்ளது.

காட்டுத்தீப் பரவல் குறையாத காரணத்தினால் சேத மதிப்பு அதிகரிக்கும் என அதிகாரிகள் கூறினர். இந்தக் காட்டுத்தீயில் சிக்கி இதுவரை 106 பேர் பலியாகி உள்ளதாகவும், 1300 க்கும் மேற்பட்டோரின் நிலை தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது. அங்கு மீட்பு பணி தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது. பலி எண்ணிக்கை கூடும் எனவும் அஞ்சப்படுகிறது.

இந்த நிலையில் தீயில் கருகி உயிரிழந்தவர்களில் 2 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஹலைனா நகரை சேர்ந்த அவர்களின் உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மீட்புப் பணிகளுக்கு உதவும் வகையில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் இருந்து அம்புலன்ஸ் போன்ற வாகனங்கள் வரவழைக்கப்பட்டுள்ளன. உணவு, குடிநீர் போன்ற அத்தியாவசிய பொருட்களை வழங்கும் பணியும் நடக்கிறது. ஆட்பற்றாக்குறை காரணமாக அமெரிக்காவில் இருந்து ராணுவமம் களம் இறங்கியது.

இந்த நிலையில் ஹவாய் தீவுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் செல்லவுள்ளார். இது குறித்து அமெரிக்காவின் மில்வாக்கி மாகாணத்தில் அவர் பேசும்போது, ஹவாய் சந்தித்துள்ள பேரழிவு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. தேவையான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மீட்பு பணிகளை பார்வையிடும் வகையில் நான் அங்கு கூடிய விரைவில் செல்லவுள்ளேன், என்றார்.

இந்த நிலையில் கனடாவின் வடமேற்கு மாகாணங்களிலும் கட்டுங்கடங்காமல் காட்டுத்தீ பரவுகிறது. தெற்கு மற்றும் வடமேற்கு ஸ்லேவ் பகுதிகளில் நிலைமை கைமீறிப் போனதை அரசு அறிந்துள்ளது. இதனால், காட்டுத்தீ பரவியிருக்கும் பகுதிகளில் அவசர நிலையைப் பிரகடனப்படுத்தி, மீட்புப் பணிவீரர்களை அந்த நாடு களம் இறக்கியுள்ளது. (04)

# இந்திய தேசியக் கொடி அவமதிப்பு உக்ரைன் பாடகி மீது வழக்கு பதிவு



உக்ரைனை சேர்ந்த பிரபல சாந்தி பீப்பிள்ஸ் இசைக்குழுவில் முன்னணிப்பாடகியாக இருப்பவர் உமா சாந்தி. தற்போது இந்த குழுவினர் இந்தியாவில் இசை நிகழ்ச்சிகள் நடத்தி வருகிறார்கள்.

போபாலில் இசை நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு மராட்டிய மாநிலம் புனே முந்த்வாவில் உள்ள ஒரு கிளப்பில் அவர்கள் இசை நிகழ்ச்சியை நடத்தினர். இதில் உமா சாந்தி பங்கேற்று பாடல்கள் பாடினார். ஆயிரக்கணக்கான ரசிகர்கள் திரண்டு நின்று ரசித்தனர்.

உமா சாந்தி தனது இரு கைகளிலும் இந்திய தேசிய கொடியை ஏந்தியபடி மேடையில் நடனம் ஆடினார். திடீரென்று கையில் இருந்த தேசிய கொடிகளை பார்வையாளர்களை நோக்கி வீசினார். இந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. இந்திய தேசிய கொடியை அவமதித்துவிட்டதாக எதிர்ப்புகளும் கண்டனங்களும் கிளம்பின. கோரேகான் பார்க் பொலிசிலும் புகார் அளிக்கப்பட்டது. இதையடுத்து உமா சாந்தி மற்றும் நிகழ்ச்சி அமைப்பாளர் கார்த்திக் மெரீன் ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்து இருப்பதாக காவல்துறை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (04)

# நிலவின் சுற்று வட்டப்பாதைக்குள் ரஷ்யாவின் லுனா 25 விண்கலம்

நிலவின் தென் துருவத்தை ஆராய்ச்சி செய்வதற்காக இந்தியாவின் இஸ்ரோ, சந்திரயான் விண்கலத்தை கடந்த ஜூலை 14 ஆம் தேதி விண்ணில் செலுத்தியது.

சந்திரயான் விண்கலம் தற்போது நிலவை நெருங்கியுள்ளது. சுமார் 100 கிலோ மீற்றர் உயரத்தில் நிலவை நெருங்கிச் சுற்றி வருகிறது. வரும் 23 ஆம் தேதி மாலை நிலவின் தென் துருவத்தில் மென்மையான முறையில் சந்திரயான் 3 தரையிறங்க உள்ளது.

இந்த நிலையில், ரஷ்யாவும் லுனா 25 என்ற விண்கலத்தை நிலவின் ஆராய்ச்சிக்கு அனுப்பியுள்ளது. இந்த விண்கலம் கடந்த 11 ஆம் தேதி விண்ணுக்கு அனுப்பப்பட்டது. வெறும் 5 நாட்களில் நிலவின் சுற்று வட்டப்பாதைக்குள் லுனா 25 விண்கலம் நுழைந்துள்ளது. வரும் 21 ஆம் தேதி இந்த விண்கலம் நிலவின் தென் துருவத்தில் தரையிறங்க உள்ளது. (04)



# புவி வெப்பமயமாதலை கண்காணிக்க நாசாவின் புதிய செயற்கைகோள்கள்

அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா, பூமி வெப்பமயமாதல் குறித்தான ஆராய்ச்சிகளை முடுக்கி விட்டுள்ளது.

உலகின் பனிக்கட்டி கண்டங்களான ஆர்டிக் மற்றும் அண்டார்டிக்காவில் தனது சோதனை மையங்களை நிறுவி, வெப்ப இழப்பு குறித்து கண்காணித்து வருகிறது.

இந்த நிலையில், அதன் மேம்பட்ட நடவடிக்கையாக துருவப் பிரதேசங்களுக்கு மேல் செயற்கைகோள்கள் ஏவி துல்லிய கணிப்புகளைப் பெறவுள்ளது.

இதற்காக தனியார் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான ரொக்கெட் லப் உடன் இணைந்து இந்த ஆராய்ச்சியை மேற்கொள்ளவுள்ளது. ஆர்டிக் மற்றும் அண்டார்டிக்காவில் இருந்து புவி எந்த அளவு தனது வெப்பத்தை இழக்கிறது என்பதற்கான புரிதலுக்கு இது உதவ இருக்கிறது. இதற்காக 2 கியூப்சாட் வகை செயற்கைகோள்களை விண்ணில் செலுத்துகிறது.

இதனால், கடல் பனி இழப்பு, பனிக்கட்டி உருகுதல் மற்றும் கடல் மட்ட உயர்வு ஆகியவை குறித்து தெளிவான கணிப்புகளும், காலநிலை மாற்றம் குறித்தும் அறிய இயலும் என நாசா ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# திடீர் மின்வெட்டு காரணமாக இருளில் மூழ்கியது பிரேசில்



தென்னமெரிக்க நாடான பிரேசிலில் மின் உற்பத்திக்கு முக்கிய ஆதாரமாக நீர்மின் நிலையங்கள் விளங்குகின்றன. நாட்டின் 63 சதவீதம் மின் உற்பத்திக்கு இது வழி வகுக்குகிறது.

இந்த நிலையில் நேற்று அதிகாலை நேரத்தில் நாடு முழுவதும் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. ரோரைமா தவிர நாட்டின் 25 மாகாணங்களும் இருளில் மூழ்கின. முக்கிய மின்சார விநியோக ஆலையில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்தச் சம்பவம் நடந்திருக்கலாம் என சந்தேகிகப்படுகிறது. எனினும், உரிய காரணம் குறித்து நாட்டின் எரிசக்தி இலாகா இதுவரை தகவல் தெரிவிக்கவில்லை.

திடீர் மின்தடையால் நாட்டின் பொதுச்சேவைகள் மற்றும் கல்வி நிலையங்கள் முடங்கின. மின்சார ரெயில்களின் இயக்கம் தடைப்பட்டதால் பொதுமக்கள் அவதியுற்றனர்.

பின்னர், பெரும்பாலான மகாணங்களில் மின்சார விநியோகம் மீட்டெடுக்கப்பட்டது. இயல்பு நிலைக்குத் திரும்பும் நடவடிக்கையில் மின்வாரிய அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். (04)

# இந்தியாவில் உள்ள அனைவரும் இந்துக்களாகவே பிறக்கிறார்கள்

## குலாம் நபி ஆசாத் கருத்து



காஷ்மீரில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு காங்கிரஸ் முன்னாள் மூத்த தலைவர் குலாம் நபி ஆசாத் பேசும்போது- இஸ்லாம் மதத்தை விட இந்து மதம் பழமையானது. 1,500 ஆண்டுகளுக்கு முன்புதான் இஸ்லாம் தோன்றியது. மதமாற்றத்தால் இந்தியாவில் முஸ்லிம்கள் இருக்கிறார்கள். இந்தியாவில் உள்ள அனைவரும் இந்துக்களாகவே பிறக்கிறார்கள்.

சில முஸ்லிம்கள் வெளிநாடுகளில் இருந்து இந்தியா வந்திருக்க வேண்டும் என்பது உறுதி. சில முஸ்லிம்கள் முகலாயர்களுக்கு சேவை செய்திருக்கலாம். ஆனால், பெரும்பாலான முஸ்லிம்கள் இந்து மதத்திலிருந்து முஸ்லிம்களாக மாறியுள்ளனர்.

சுமார் 600 ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் இஸ்லாத்திற்கு மாறியதற்கான சான்றுகள் உள்ளன. காஷ்மீரின் முக்கிய மக்கள் தொகை காஷ்மீரி பண்டிட்கள். காஷ்மீரில் உள்ள முஸ்லிம்கள் அனைவரும் காஷ்மீரி பண்டிட்டுகளிலிருந்து மதமாற்றம் செய்யப்பட்டனர்.

இந்துவாக இருந்தாலும், முஸ்லீமாக இருந்தாலும், ராஜபுத்திரனாக இருந்தாலும், பிராமணனாக இருந்தாலும், தலித் ஆக இருந்தாலும், காஷ்மீரியாக இருந்தாலும், குஜ்ஜராக இருந்தாலும், நாம் அனைவரும் இந்த தாய்நாட்டின் ஒரு பகுதி. எங்களின் வேர்கள் இந்த மண்ணில் உள்ளன. வாழ்நாள் முடிந்த பின்னரும் இந்த மண்ணுக்குத் திரும்புவோம் என தெரிவித்திருக்கிறார்.

# தமிழ் மக்களின் உணர்வுகளை புண்படுத்தும் அரச திணைக்களங்களின் செயற்பாடுகளை

## நிறுத்த வேண்டும் - அமைச்சர் டக்ளஸ்



தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை தீர்த்து வைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளையும், பரிந்துரை களையும் வரவேற்றுள்ள ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த முன்னெடுப்புக்கள் அர்த்தபூர்வமானவையாக அமைய வேண்டுமாயின் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் நடைமுறைப் பிரச்சினைகள் தொடர்பாக விரைவான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தல் தொடர்பாக, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பாக நேற்று ஜனாதிபதிக்கு கையளிக்கப் பட்டுள்ள பரிந்துரைகளிலேயே குறித்த விடயம் வலி றுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, தொல்லியல் திணைக்களம் மற்றும் வனவளப் பாதுகாப்பு, வனஜீவராசிகள் திணைக்களம் போன்றவற்றின் சில முறையற்ற செயற்பாடுகள் தமிழ் மக்களின் உணர்வுகளை பாதிக்கும் வகையில் இருப்பதாக குறித்த ஆவணத்தில் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர், தொல்லியல் ஆய்வு செயற்பாடுகள் அந்தந்த மாவட்டத்தினைச் சேர்ந்த வரலாற்றுத்துறை நிபுணர் களின் பங்குபற்றுதல் மற்றும் கலந்தாலோசனைகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட வேண்டுமே தவிர, தொல்லியல் திணைக்களத்தின் கொழும்பு அலுவ லகத்தில் இருக்கின்ற உயர் அதிகாரிகள் சிலரின் விருப்பு வெறுப்பு சார்ந்த முன்னெடுப்புக்களாக அமைவதை அனுமதிக்கக் கூடாது எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

பறாளை முருகன் ஆலயம், கீரிமலை தீர்த்தக் குளம் மற்றும் பருத்தித்துறை இறங்கு துறை போன்ற பகுதிகளை, தொல்லியல் திணைக் களத்தினால் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதே சங்களாக அடையாளப் படுத்தி அண்மையில் வர்த்தமானி வெளியிடப்பட்ள ளமை தொடர்பாக குறித்த ஆவணத்தில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

துறைசார் நிபுணர்கள், சம்பந்தப்பட்ட பிரதேசத்தின் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் போன்ற யாருடைய கருத்துக்களும் உள்வாங்கப்படாமல் கொழும்பு அதிகாரிகளினால் வெளியிடப்பட்டுள்ள குறித்த வர்த்தமானில் உள்ளடக்கப்பட்டுள்ள பறாளை முருகன் ஆலயம் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள காரணங்கள் தவறானவை என்பதை வரலாற்றுத் துறை நிபுணர்கள் தெரிவித்துள்ளதாகவும் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

அதேபோன்று, வனவளப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் செயற் பாடுகள் சிலவும், தற்போதைய ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு மாறாக வடக்கு கிழக்கு பிரதேசங்களில் முன்னெ டுக்கப்பட்டு வருவதாகவும், இவ்வாறான விடயங்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், முன்னெடுக்கப்படுகின்ற எவ்வ கையான முயற்சிகளும் வெற்றியளிக்காது எனவும் தேசிய நல்லிணக்கத்தினை வலுப்படுத்த உதவாது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இருந்து ஆரம்பித்து முன்னோக்கி நகர்வதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைளை நிறைவேற்ற முடியும் என்ற கட்சியின் நீண்ட கால நிலைப்பாடு, குறித்த ஆவணத்தில் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது. 13 ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக அமுல் படுத்துவதற்கு சாத்தியமான 3 கட்டப் பொறிமுறைகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. (01)




# ஆசியக் கிண்ணத்தில் அதிரடிதான்! பாகிஸ்தான் பயிற்சியாளர் கருத்து

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தான் அணி அதிரடியாக விளையாடும், என அந்த அணியின் பயிற்சியாளர் கிரான்ட் பிராட்பர்ன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பாபர் அசாம் தலைமையிலான பாகிஸ்தான் அணி அதிரடியாக விளையாடி தொடரைக் கைப் பற்றியது. பாகிஸ்தானின் புதிய அணுகுமு றைக்கு 'பாக்போல்' என்று கிரிக்கெட் நிபுணர்கள் பெயரிட்டனர். இந்த நிலையில், ஒருநாள் கிரிக்கெட்டிலும் அதிரடியாக விளைய ாடுவோம் என்று பாகிஸ்தான் பயிற்சியாளர் கிராண்ட் பிராட்பர்ன் தெரிவித்துள்ளார்.

லாகூர், கராச்சியில் நடைபெற்ற பயிற்சி முகாம்களில் பாகிஸ்தான் வீரர்கள் அதிரடியான ஆட்டம் தொடர்பான பயிற்சிகளில் ஈடுபட் டுள்ளார்கள். இது குறித்துப் பேசிய பிராட்பர்ன், பாகிஸ்தான் அணியில் இடம்பெற வேண்டு மென்றால் தாக்குதல் பாணி ஆட்டத்தைக் கையில் எடுக்க வேண்டும். ஏனெனில், உலக ளவில் கிரிக்கெட் தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வருகிறது என்றார்.

தாக்குதல் பாணியில் விளையாடும் வீரர்களுக்கு அணித் தேர்வில் முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் கிராண்ட் பிராட்பர்ன் குறிப்பிட்டார். இதுகுறித்து விளக்களித்த அவர், பாகிஸ்தான் அணி, மத்திய ஓவர்களில் அதிரடியாக ஓட்டங்களைக் குவிக்க வேண்டும். துடுப்பாட்டத்தில் மட்டுமில்லாமல் பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பிலும் தாக்குதல் பாணி ஆட்டத்தையே கைக்கொள்ளவேண்டும்.

பாகிஸ்தான் கிரிக்கெட்டில் வேகப்பந்து வீச்சு சகலதுறை வீரர்கள் மிகவும் குறைவாக உள்ளனர். 2 ஆண்டுகளுக்குப் பிறகு அணிக்குத் திரும்பியுள்ள பஹீம் அஷ்ரப், அந்தக் குறையைப் போக்குவார் என நம்புகிறேன்.

வேகப்பந்து வீச்சை திறம்பட எதிர்கொண்டு இறுதிக்கட்டத்தில் அதிரடியாக ஓட்டங்களைக் குவிப்பதில் அவர் வல்லவர். பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இயக்குநர் மிக்கி ஆர்தர், தேர்வுக்குழுத் தலைவர் இன்ஸமாம் உல் ஹக் ஆகியோருடன் இணைந்து மீண்டும் பணியாற்றுவது மகிழ்ச்சி அளிக்கிறது, என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தொடர்ந்து ஆதரவு வழங்குவோம் மீண்டும் உறுதியளித்தது சீனா



இலங்கையின் நிதிக் கடன் சவால்களை திறம்பட கையாள்வதில் இலங்கைக்கு தொடர்ந் தும் ஆதரவளிப்பதாக சீனா மீண்டும் வலியுறுத் தியுள்ளது.சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழுவின் வெளிவிவகார ஆணைக்குழுவின் பணிப்பாளர் வான் யீ இதனைத் தெரிவித்துள் ளதார்.

இலங்கையின் இறையாண்மை, சுதந்திரம் மற்றும் தேசியப் பெருமையைப் பாதுகாப்பதற்கு சீனா பலமாக ஆதரவளிப்பதாகவும் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்த தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவின் யுனான் மாகாணத்தின் குன் மிங்கில் நடைபெற்று வரும் ஏழாவது சீன - தெற்காசிய கண்காட்சியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட பிரதமர் தினேஷ் குணவர் தனவைச் சந்தித்த போதே வான் யீ இதனைக் குறிப்பிட்டுள்ளார்.இலங்கையின் சுயாதீன அபிவிருத்திக்கான திறனை மேம்படுத்தவும், வறுமைப் பொறியிலிருந்து விடுபடவும், தொழில் மயமாக்கல் செயல்முறை மற்றும் விவசாய நவீனமயமாக்கலை விரைவுபடுத்தவும் சீனா உதவுவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு சீனாவின் நிரந்தர ஆதரவுக்கும் கடினமான காலங்களில் சரியான நேரத்தில் பயனுள்ள ஆதரவை அளித்தமைக்கும் பிரதமர் தினேஷ் குணவர்தன தனது நன்றியை இதன்போது தெரிவித்துள்ளார். (04)

# நல்லூர் மகோற்சவகால பஜனை கலந்துகொள்ள ஆதீனம் அழைப்பு

நல்லூர் கந்தப்பெருமான் மகோற்சவ காலத்தில் மாணவர்களிடையே ஆன்மிக விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாகவும் இறை பக்தியை அதிகரிக்கும் முகமாகவும் நடாத்தப்படுகின்ற பஜனை நிகழ்வு வழமை போல இம்முறையும் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில், ஸ்தாபக ஆதீனமுதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளின் வழிகாட்டலில் இடம்பெறும்.

பஜனை கொடியேற்றத் திருவிழாவில் இருந்து கொடியிறக்கத் திருவிழா வரை முருகப்பெருமான் காலையில் உள்வீதியில் வலம் வரும் பொழுதும் மாலையில் வெளிவீதி வலம் வரும்போதும் நடைபெறும்.

இப்பஜனை நிகழ்வில் பங்குபற்றி நல்லைக் கந்தப்பெருமானின் திருவருளைப் பெற வருமாறு பாடசாலை மாணவர்களையும், அறநெறிப் பாடசாலை மாணவர்களையும், முருகப்பெருமான் அடியவர்களையும் சிவகுரு ஆதீனம் அன்புடன் அழைக்கின்றது.

பஜனையில் பங்குபற்ற விரும்புகின்ற பாடசாலைகளும் (அதிபர்/பொறுப்பாசிரியர்/ சைவசமய ஆசிரியர்/ சங்கீத ஆசிரியர்/ஆசிரியர்/அறநெறி ஆசிரியர்) ஆன்மீக சமய நிறுவனங்களும் மேலதிக விபரங்களைப் பெற விரும்புகின்ற ஆர்வலர்களும் இல 692, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீனத்தில் அல்லது 077 222 0103 எனும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# மாளிகைக்காடு சபீனாவில் சேவை நலன் பாராட்டு



(நூருல்ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய மாளிகைக்காடு பீனா முஸ்லிம் வித்தியாலத்தில் ஆசிரியரகளாக சேவையாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற ஆசிரியர்களான ஏ.ஆர்.ஏ. றஷீட் மற்றும் திருமதி ஜெ. இஸ்மாலெவ்வை ஆகியோரின் சேவையைப் பாராட்டுமுகமாக ஆசிரியர் நலன்புரிக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட சேவை நலன் பாராட்டு நிகழ்வு இன்று பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.அஸ்மி தலைமையில் நடைபெற்ற இந்த பாராட்டு விழாவில் பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம், கௌரவ அதிதியாக காரைதீவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஜே. டேவிட் ஆகியோர் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஓய்வு பெறவுள்ள காரைதீவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஜே. டேவிட் அவர்கள் பாடசாலை சமூகத்தினரால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி, பாராட்டி கௌரவிக்கப்பட்டார். இந்த நிகழ்வில் பாடசாலை பிரதியதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவியின் பரதநாட்டிய அரங்கேற்றம் சனிக்கிழமை



திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியினதும், நாட்டிய கலாவித்தகர் ஸ்ரீமதி சுதர்சினி கரன்சனினதும் மாணவியான செல்வி நியோமி வெலிஜியா வில்சனின் பரதநாட்டிய அரங்கேற்றம் நாளை மறுதினம் 19 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப.2.30 க்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவர் கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடனக் கலையைப் பயின்று அரங்கேற்றத்தை மேற்கொள்கின்ற எட்டாவது மாணவியாவார்.

கலைத்தூது அழகியல் கல்லூரியின் உப அதிபர் அருட் பணி செ.அன்புராசா அடிகள் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கரவெட்டி குருஷேத்திரம் நடனாலயத்தின் இயக்குநர் செல்வி பேரின்பநாயகி சிவகுரு கலந்து சிறப்பிக்கவுள்ளார். (04)

# நற்பிட்டிமுனை கந்தசுவாமி ஆலயம் மகா கும்பாபிஷேகம் நாளை ஆரம்பம்!



(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை நற்பிட்டிமுனை கந்தசுவாமி ஆலயத்தின் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை கருமாரம்பத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 22 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

தொடர்ந்து மறுநாள் 23ஆம் தேதி மகா கும்பாபிஷேகம் இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

# ஓய்வூதிய விழிப்புணர்வு நிகழ்ச்சி



(எம்.எப். நவாஸ்)

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் அரச ஓய்வூதிய திட்டம் சம்பந்தமான விழிப்புணர்வு கருத்தரங்கு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் சமூக பாதுகாப்பு சபையின் விடயப் பொறுப்பாளர் எம்.எல்.நஜிமுடீன், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் முன்பள்ளி பருவ அபிவிருத்தி உத்த ியோகத்தர் யூ.எல். சித்தி சுஹறா ஆகியோரின் நெறிப்படுத்தலில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஸாபிர் அவர்களின் தலைமையில் இன்று பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் விசேட அதிதியாக இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் அம்பாறை மாவட்ட இணைப்பதிகாரி எஸ்.டி.சுதாகரன், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எம். ஹமீட், பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எஸ். சியாத், மகளிர் அபிவிருத்தி வெளிக்கள உத்தியோகத்தர் எஸ்.எ.எம்.எஸ்.பர்ஹானா மற்றும் முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# தங்காலை துப்பாக்கிச்சூடு சந்தேகநபர் ஒருவர் கைது!

## ஹெரோயினுடன் சிக்கினார்

தங்காலை, குடாவெல்ல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் தொடங்கொட நுழைவாயிலுக்கு அருகில் 43 வயதுடைய குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களை ஏற்றிச் சென்ற காரின் சாரதியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், அவரிடமிருந்து ஹெரோயின் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் தற்போது வெளிநாட்டில் வசிப்பதாகக் கருதப்படும் திட்டமிட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்த அம்பலாங்கொட டில்ஷான் என்பவருக்கு நெருக்கமான ஒருவரென பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

நகுலோகமுவ - தெற்கு குடாவெல்ல பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பிலேயே குறித்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (03)

# அமெரிக்க நியூயார்க் நகரில் டிக்டொக் செயலிக்குத் தடை

நியூயார்க் நகரின் தொழில்நுட்ப இணைப்புகளின் பாதுகாப்பை அச்சுறுத்தும் வகையில் உள்ள டடிக்டொக் செயலி தடை செய்யப்பட்டுள்ளதாக நியூயார்க் மேயர் எரிக் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

பயனாளர்களிக் பாதுகாப்புக் குறைபாடுகள் காரணமாக இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும், நியூயார்க் நகரில் ஏற்கனவே அரசு வழங்கிய மொபைல் சாதனங்களில் இந்தச் செயலி தடை செய்யப்பட்டுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆயினும், அமெரிக்க பயனர்களின் தரவுகளை சீன அரசாங்கத்துடன் பகிர்ந்து கொள்ளவில்லை என்றும் பயனர்களின் தனியுரிமையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் டிக்டொக் தெரிவித்துள்ளது.

# தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கொடியேறியது! - திருவிழா ஆரம்பம்





வரலாற்றுச்சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது (01)

## திருக்கோவில் சித்திரவேலாயுதசுவாமி ஆடி அமாவாசைத் தீர்த்தோற்சவம்

(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் சித்திரவேலாயுதசுவாமி ஆலய வருடாந்த ஆடி அமாவாசை தீர்த் தோற்சவம் நேற்று புதன்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

தந்தையை இழந்தவர்கள்தர்ப்பணம்செலுத்தி பிதிர்க்கடன் செய்வதற்கு சிவாச்சாரியார்கள் சகிதம் விரிவான ஏற்பாடுகளும், போக்குவரத்து, மின்சாரம், சுகாதாரம்,



பாதுகாப்பு மற்றும் தீர்த்த ஒழுங்குக்கான சகல ஏற்பாடுகளும் முறையாக மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் குருக்கள் மற்றும் பிரதம குரு சிவஸ்ரீ திருக்குமரக் குருக்கள் தலைமையில்



ஆலயகுரு சிவஸ்ரீ அங்குசநாதக்குருக்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக தீர்த்தோற்சவம் இடம்பெற்றது.

கடந்த 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான உற்சவம் நேற்று புதன்கிழமை தீர்த்தோற்சவத்துடன் நிறைவடைந்தது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.08.2023இல் வெளியிடப்பெற்றது.